விளக்குகள் அமைத்தல், 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல், 2 இலட்சம் ரூபாய் செலவில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள், 10–7–2017 அன்று 4-15 மணியளவில் குப்பைகளுக்கிடையே உள்ள அதிக வெப்பத்தின் காரணமாக ஓரிடத்தில் ஏற்பட்ட தீ, உரத் திடல் மற்றும் பிற இடங்களுக்கும் பரவியது. தகவல் கிடைத்தவுடன், நகராட்சியின் தண்ணீர் வாகனம் மற்றும் மண் அள்ளும், மண் நிரப்பும் வாகனம் Escalator–cum–Loader மூலம் தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. மேலும், இரவு முழுவதும் தீயணைப்பு வாகனம் மற்றும் நகராட்சியினுடைய தண்ணீர் வாகனம், மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஆகியவற்றைக் கொண்டு தீயணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது தீ முற்றிலும் அணைக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று தீயணைப்பு வாகனங்கள், இரண்டு தண்ணீர் வாகனங்கள், நகராட்சியின் மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஒன்று, தனியாருக்குச் சொந்தமான மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஒன்று மற்றுமொரு தண்ணீர் வாகனம் என மொத்தம் எட்டு வாகனங்களைக் கொண்டு புகையைக் கட்டுப்படுத்தும் பணிகள், நகராட்சியின் இரவு துப்புரவுப் பணியாளர்கள், 5 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், 3 துப்புரவு ஆய்வாளர்கள், 1 துப்புரவு அலுவலர் ஆகியோர்மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இனிமேல் அதுபோன்ற சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) பகுதிநேர பள்ளி ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல் மற்றும் நீட் தேர்வு–மாணவர் சேர்க்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திடீரென்று இப்படியெல்லாம் எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு பள்ளி கல்வித் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார். சொல்லுங்கள்.

2017 ஜூலை 12]

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையில், பள்ளிக் கல்வித் துறையிடம் சில கோரிக்கைகளை வைத்தும், மருத்துவக் கல்வித் துறையிடம் சில கோரிக்கைகளை வைத்தும், பகுதிநேர ஆசிரியர் சங்கங்களின் கூட்டு இயக்கமும், அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில், தி.மு.க., காங்கிரஸ் போன்ற பல்வேறு கட்சிகளும் இன்று போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றன.*

பகுதிநேர ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 16,549 பேர்கள் இருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நாம் எல்லோரும் படிக்கும்போது, Drawing Master, Drill Master *போன்றவர்கள்* regular *ஆகத்தான் பணிபுரிவார்கள்.* Part time–*ல் கிடையாது. இப்போது, வாரத்திற்கு 3 நாட்கள், அதுவும் ½ நாள் பணிபுரிகிற மாதிரி* Drawing Master, Drill Master *பதவிகளை 2012 ஆம் ஆண்டில் நியமித்திருக்கிறார்கள். அப்போது ரூ.5,000/– சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. 2014–ல் ரூ.7,000/– கொடுத்தீர்கள். அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், எங்களை நிரந்தரமாக்கி விடுங்கள். ரூ.15,000/– சம்பளம் கொடுத்தால்கூட போதும், நாங்கள்* permanent *ஆக,* regular *ஆக வேலை செய்கிறோம் என்று கோரிக்கையை வைத்துள்ளார்கள். எனவே, அந்தக் கோரிக்கையை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

NEET *தேர்வினைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இன்று நாம் என்னதான் தீர்மானம் போட்டாலும், அதனை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகயில்லை. 17 ஆம் தேதி நீங்கள் அறிவிக்கப் போவதாகச் சொல்கிறீர்கள். அதனால் பொறியியல் கல்லூரியின்* admission *தடைபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கல்வித் துறை அமைச்சரின் கவனத்தை மட்டும் ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) நீங்கள்* NEET *தேர்வைப் பற்றிப் பேசினால் எப்படி?*

முனைவர் க. பொன்முடி: *இதோ ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.* NEET *தேர்வினைப் பொறுத்தவரையில், அனைத்துக் கட்சியினரையும் அழைத்துச் சென்று, டெல்லியில் அழுத்தம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று உங்கள் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது பகுதிநேர ஆசிரியர்களுடைய பணிகளைப் பற்றி குறிப்பிட்டு, அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக இன்றைக்குப் போராட்டம் நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். பகுதிநேர ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் முதன்முதலில் 5,000 ரூபாயில்தான் அவர்களைப் பணி அமர்த்தினோம். அதற்குப் பிறகு நம்முடைய அரசு கருணையோடு 7,000 ரூபாயாக உயர்த்தித் தந்தது. அதற்குப் பிறகு இன்றைக்கு 7,700 ரூபாயாக உயர்த்தித் தரலாம், அது மூன்று ஆண்டுகளுக்கு இருக்கலாம் என்ற காரணத்தின் அடிப்படையில் அதற்கான பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு குழுவை அமைத்து ஆசிரியர் பெருமக்களை அழைத்து, என்னென்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பதை அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. கவன ஈர்ப்பு

(அ) துறையூர் தொகுதி, முருங்கபட்டி வெடிமருந்து தொழிற்சாலையினால் சுற்றுச்சூழல் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

***திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, முருங்கபட்டியில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு*